சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.20.03.2025
O.S.No. 29/2021
DW 1 : பாத்திமா (வயது 50 ) க/பெ.உறபீப் ரகுமான்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>வாதி தரப்பு கு.வி தொடர்ச்சி</u>**

எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் நான் படித்து பார்த்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-3 குடும்ப அட்டையில் சாகுல் உறமீது என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு பதில் கொடுக்காததற்கு சிறப்பான காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 24.02.2018 அன்று வாதி எனக்கு ரூ.1 லட்சம் கைமாற்று தொகையாக கொடுத்ததாகவும், அதன் பின்னிட்டு 26.09.2018 அன்று வாதி எனக்கு ரூ.1.50 லட்சத்தை கடனாக கொடுத்ததாகவும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் சொல்லப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பில் மேற்படி ரூ.2.50 லட்சத்திற்கு வாதிக்கு நான் புரோ நோட் எழுதி கொடுத்ததாகவும், அந்த தொகையை வட்டியுடன் திரும்ப கொடுக்க வேண்டும் என்று அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அறிவிப்பில் சொல்லப்பட்டிருந்தது, ஆனால் நான் புரோநோட் எழுதி கொடுக்கவில்லை, நான் கடன் வாங்கவில்லை. நான் கூறுவது போல் வாங்காத கடனுக்கு எதற்காக அறிவிப்பு அனுப்பினீர்கள் என்று வாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் வாங்காத கடனுக்கு புரோநோட் எழுதி கொடுத்ததாகவும், அதற்காக வட்டி கொடுக்கவேண்டும் என்று வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி பிறகும் வழக்கு தாக்கல் செய்த பிறகும் வாதி மீது ஏதேனும் சட்ட படியான நடவடிக்கைகள் எடுத்தேனா என்றால் இல்லை. வழக்குரையிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறியுள்ள முகவரியில்

தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குளித்தலையில் வாங்கியதாக கூறும் பிளாட்டிற்காக வாதியிடம் ரூ.1 லட்சம் ரொக்க கடனும், அதன் பின்பு எனது பிள்ளைகள் வேலைக்காக வெளிநாடு செல்வதற்காக ரூ.1.5 லட்சமும் வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக புரோநோட் எழுதி கொடுத்துவிட்டதாக வாதி வழக்கில் கூறியுள்ளார் எனறால் நான் கடன் வாங்கவில்லை. நான் வாதியிடம் கடன் வாங்கிவிட்டு வழக்கிற்காக அதனை வாங்கவில்லை என்று பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வசிக்கும் பகுதியில் என்னை பைரோஜா என்று தான் அழைப்பார்கள் என்றும் அந்த பெயரில் தான் நான் புரோநோட்டை வாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அதனால் தான் எனக்கு வந்த அறிவிப்பை வாங்கி படித்து பார்த்துவிட்டு, வாங்கிய கடனை மறுப்பதற்காக எனது பெயர் பைரோஜா இல்லை என்றும், கடன் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக மறுத்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல, எனது பெயர் பாத்திமா தான். நான் கொடுத்துள்ள அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் நான் கொடுத்த தகவலின் பேரில் வழங்கப்பட்டவை என்றால் சரிதான். வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு அதில் சொல்லியுள்ள விவரங்களை சமாதானம் பேசி கொள்ளலாம் என்று வாதியை அணுகி நான் கேட்டேனா என்றால் இல்லை. நான் சமரசம் பேசலாம் என்று சொன்னதால் தான், வாதி காத்திருந்து தாவா வழக்கை பின்னிட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. தாவா கடனை வாதியிடம் புரோநோட் எழுதி கொடுத்து வாங்கியதால் தான் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்ற பிறகும் சட்ட பூர்வமான நடவடிக்கை எதுவும் வாதி மீது எடுக்கவில்லை என்றால் நான் பணம் வாங்கவில்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. எனது எதிர் வழக்குரையிலோ நிருபண வாக்குமூலத்திலோ பணம் வாங்கவில்லை என்பதால் வாதி மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும், வாதியிடம் நான் கடன் பெற்றுக்கொண்டு புரோநோட் எழுதி கொடுத்துள்ளேன் என்பதால், புரோநோட்டில்

கண்ட தொகையை நான் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் புரோநோட்டை நான் எழுதி கொடுக்கவில்லை. வழக்கு புரோநோட் தொகையை கொடுக்க கூடாது என்பதற்காக அதனை நான் எழுதி கொடுக்கவில்லை என்று கூறியும், எனது பெயர் பைரோஜா இல்லை என்று மறுத்தும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள வாதி ஆறுமுகம் எனது கடைக்கு அடிக்கடி வரக்கூடிய நபர் என்று நான் ஒப்புக்கொண்டுள்ள நபரா என்றால் சரிதான். பைரோஜா மற்றும் பாத்திமா ஆகிய இரண்டு பெயர்களும் என்னுடையது தான் என்றும், நான் எழுதி கொடுத்த புரோநோட்டின் படி தாவா கடனை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல எனது பெயர் பாத்திமா தான்.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed /
பாத்திமா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி